பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 10–2–1983 காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

139. கிருஷ்ணகிரி—பெங்களூர் சாலையிலுள்ள வண்டன்பெட் சுங்கச் சாவடியினை இடமாற்றம் செய்வது குறித்து, 19–11-1982–ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 1279–ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

140. நுங்கம்பாக்கம் மத்தியப்பகுதி நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து 17.2.1981 ஆம் தேதியிடப்பெற்ற வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 106 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS